**I ADDL. DISTRICT & SESSIONS COURT, VELLORE**
**DEPOSITIONS OF WITNESSES**
**(CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE)**
**DEPOSITIONS OF WITNESSES P.W.1**
**MCOP.NO.412/2017**

| | | |
|---|---|---|
| **NAME** | : | சுலைமான் |
| **FATHER NAME** | : | |
| **VILLAGE** | : | |
| **TALUK** | : | |
| **CALLING** | : | |
| **RELIGION** | : | |
| **AGE** | : | |

**Solemnly affirmed in accordance with the provisions of Act x of 1873 of 10.06.2022.**

குறுக்கு விசாரணை

நான் இந்த விபத்தை நேரடியாக பார்க்கவில்லை என்றால் சரி. கேள்விப்பட்ட சாட்சிதான் என்றால் சரி. 4ம் மனுதாரர் என்னுடைய சகோதரி திருமணம் முடிந்து அவருடைய கணவருடன் வசித்து வருகிறார் என்றால் சரி. நான் மட்டும் வேலை பார்க்கிறேன். என் தம்பிக்கு 27 வயதாகிறது. அவர் வேலை பார்க்கவில்லை. எனக்கும் என் தம்பிக்கும் திருமணம் ஆகிவிட்டது. தனித்தனியாககுடியிருக்கிறோம். நாங்கள் தனியாக வாழ்வதினால் நாங்கள் எங்கள் குடும்பத்தைச் சார்ந்து வாழவில்லை என்றாலும் அதனால் நஷ்டஈடு பெறத் தகுதியில்லை என்றாலும் சரியல்ல. என்னுடைய தந்தையின் வேலை குறித்தும் அவரது வருமானம் குறித்தும் ஆவணம் தாக்கல் செய்யாத காரணத்தினால் நாங்கள் சொல்லியுள்ள விவரம் தவறானவை என்றால் சரியல்ல. இந்த விபத்தில் டாடா ஏசில் பயணம் செய்த 3பேர் இறந்துவிட்டார்கள் என்றால் சரிதான். அதில் டிரைவரும் கிளீனரும் தொழிலாளர் ஆணையத்தில் வழக்கு போட்டு வழக்கு நிலுவையில் உள்ள விவரம் தெரியுமா என்றால் தெரியாது. பொருட்களை ஏற்றிக்கொண்டு சென்றுவந்ததாகத்தான் முதல் விசாரணையில் கூறியுள்ளோம் என்றால் சரி. மனுவில் Flower Goods Owner என காணப்படுகிறது என்றால் சரி. ம.ச.5ல் டாடா ஏசில் எத்தனை பேர் பயணம் செய்யலாம் என காணப்படுகிறது என்றால் 2பேர். என் அப்பா இரும்பு பொருட்களை ஏற்றிக்கொண்டுதான் சென்றார் என்றால் சரி. டிரைவராகவோ கிளீனராகவோ செல்லவில்லை என்றால் சரி. இன்சூரன்ஸ் பாலிசியில் டிரைவர் கிளீனரை தவிர்த்து வேறு யாருக்கும் கூடுதல் பிரிமியம் வசூலிக்கவில்லை என்றால் அதுபற்றி தெரியாது. என் அப்பா கிராப் எடுத்துச் சென்றார் என்பதற்கு ஏதாவது ஆவணம் தாக்கல் செய்துள்ளேனா என்றால் இல்லை. நான் நஷ்டஈடு வாங்குவதற்கு அவ்வாறு கூறுகிறேன் என்றால் சரியல்ல.

.......2

3ம் எதிர்மனுதாரர் பொறுத்தவரை என் அப்பா நஷ்டஈடு பெற தகுதியற்றவர் என்றால் சரியல்ல. 3ம் எதிர்மனுதாரர் பொறுத்து மனு தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. கண்டெய்னர் லாரி மீது மோதி விபத்து நடந்ததாக நான் கேள்விப்பட்டேன் என்றால் சரி. அந்த லாரி சிக்னல் இல்லாமல் நின்றிருக்க வாய்ப்பு உண்டு என்றால் சரி. நாங்கள் நஷ்டஈடு பெற வேண்டும் என்றால் 4ம் எதிர்மனுதாரரிடம் தான் பெற வேண்டும் என்றால் சரியல்ல. எது எவ்வாறாயினும் அதிகப்படியான நஷ்டஈடு கோரியுள்ளேன் என்றால் சரியல்ல.

சாட்சி திறந்த நீதிமன்றத்தில் சொல்ல சொல்ல என்னால் தட்டச்சர்க்கு சொல்லப்பட்டு அவரால் கணிணியில் தட்டச்சு செய்யப்பட்டு என்னால் சரிபார்க்கப்பட்டு சாட்சிக்கு படித்து காண்பித்து சரி என்று சொல்லி ஒப்புக்கொண்டு கையெழுத்திட்டார்.

முதலாவது கூடுதல் அமர்வு நீதிபதி,
வேலூர்.